# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2023 விடை (மே—1—31) விலை உருபா 1-50 (இதழ் எண்: 155)


# இந்திய அரசு தடை செய்தது விடுதலைப் புலிகள் இயக்கத்தை அன்று; தமிழின ஒட்டுமொத்த முன்னேற்றத்தையே!

## உலகத் தலைவர்கள் அனைவரிலும் உயர்ந்து நிற்கின்றார் பிரபாகரன்!

• "தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் (LTTE) வெளிநாட்டிலிருந்து செயல்படும் அமைப்பாகும், எனவே இந்தியாவில் அதைத் தடை செய்ய முடியாது. ஆனால் அதன் நடவடிக்கைகளைத் தடைசெய்ய முடியும்"

—என்று கடந்த 10-5-92 அன்றுதான் நடுவண் உள்துறை இணையமைச்சர் எம்.எம்.ஜேகப், கொச்சியில் ஒரு செய்தியாளர் கூட்டத்தில் கருத்துக் கூறினார். ஆனால் அவர் கருத்துக் கூறிய எட்டு நாள்களுக்குப் பின் இந்திய அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்திருக்கிறது. அத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு தரும் தலைவர்கள், இயக்கங்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அரசு எச்சரிக்கை கொடுத்துள்ளது

இந்திய அரசு தடை செய்தது விடுதலைப் புலிகள் இயக்கத்தை அன்று; உலகத் தமிழரின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தையே ஆகும். அதுவும் தமிழக முதல்வர் செயலலிதாவின் அழுத்தம் தாளமுடியாமலேயே நடுவணரசு விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்துள்ளது.

செயலலிதாவைப் பொறுத்த அளவில், தாம் ஆட்சிக்கு வந்தது முதல், விடுதலைப் புலிகள் இயக்-

Scanned with CamScanner

கத்தைத் தம் அரசியல் எத்துகளுக்கு ஒரு பகடைக்-காயாகவும், தாம் செய்யும் ஏமாற்றுகளிலிருந்து தம்மை மறைத்துக் கொள்வதற்கு அதை ஒரு கேடயமாகவுமே பயன் படுத்தி வருகிறார்.

கலைஞர் ஆட்சியிலிருந்த பொழுது இவரின் அரசியல் சதுரங்க ஆட்டத்தை விடுதலைப் புலி-களுக்குச் சார்பாகவும், கலைஞருக்கு எதிராகவும் ஆடிக் கொண்டிருந்தார். ஆனால் தாம் ஆட்சிக்கு வந்தபின் அதை விடுதலைப் புலிகளுக்கு—அஃதா-வது தமிழினத்திற்கு எதிராகவும், பார்ப்பனீயத்-திற்குச் சார்பாகவுமே ஆடிக் கொண்டிருக்கிறார். இந்த உள்முகத் தாக்கங்களின் புறமுக விளைவே நடுவணரசின் விடுதலைப் புலிகளின் தடை அறிவிப்பு.

இனி, இவரைப் போலவே தமிழக இந்திரா பேராயக் கட்சித் தலைவரான வாழப்பாடி இராம மூர்த்தியும், பாராளுமன்ற உறுப்பினரும் பச்சைப் பார்ப்பனரான சுப்பிரமணியம் சுவாமியும், விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யச் சொல்வதில் அளவுக்கு மீறிய ஆர்வம் காட்டினர். அதற்கு உள்முகக் காரணம் அவர்களை உள்ளடக்கிய சூழ்ச்சிகளை மறைக்கின்ற முயற்சியாகவும் இருக்கலாம்.

தொடக்கத்தில் விடுதலைப் புலிகள் இயக்-கத்தைத் தடை செய்வதில் நடுவணரசு அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. உள்துறை அமைச்சர் சவாணும், அவரின் துணை அமைச்சர்களும் கூட ஏனோ தானோ போக்கிலேயே, செயலலிதா போன்-றோர் வேண்டுகோள்களுக்கு உடனடியாகச் செவி சாய்க்காமல் ஏதேதோ காரணங்கள் கூறிக் காலத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தனர்.

ஆனால் செயலலிதாவை விட அவருடைய கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதினோர் ஒப்போலைகள் தம் ஆட்சி நிலைப்புக்கு வலிவாகத் துணை நிற்க வேண்டிய தேவையினால், இந்தியத் தலைமையமைச்சர் நரசிம்மராவ் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வேண்டிய கோரிக்கை-யின் அழுத்தத்தால், உள்துறை அமைச்சகத்தை நெருக்கி வந்தார். ஆனாலும் அங்குள்ள அதிகாரிகள் தலைமையமைச்சர் கருத்துக்கு மாறுபடப் பேசியிருக்கிறார்கள். எனவே தலைமையமைச்சர், இக் கோரிக்கை குறித்துத் தெளிவாகவும் சரியாகவும், தமக்குச் சார்பான ஒரு முடிவெடுக்கும்படி உள் துறைச் செயலர்களையும் அரசியல் திறவோர்களை-யும் கொண்ட கருத்தாய்வுக் குழு ஒன்றை அமைத்தார்.

அக்குழு கடந்த ஏப்பிரல் மாத முடிவு வரை மூன்று முறை கூடியது. அக்குழுவினருடன் படைத்துறை அதிகாரிகள், புலனாய்வுத் துறை அதிகாரிகள், உள்துறை, சட்ட அமைச்சக, வெளி-யுறவு அமைச்சக அதிகாரிகளும் கலந்து கொண்ட-னர். ஆனால் அவர்களால் எந்த முடிவும் எடுக்க முடியவில்லை. காரணம் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதில் உள்நாட்டு, அயல் நாட்டுச் சிக்கல்கள் அத்துணையளவு இருந்தன.

தொலை நோக்காகப் பார்க்கையில், புலிகளைத் தடை செய்வதால் எதிர்மறையான விளைவுகளே ஏற்படும் என்று சட்ட அமைச்சகமும் வெளியுறவுத் துறை அமைச்சகமும் கருத்துத் தெரிவித்திருந்தன. பல நாடுகளிலும் இயங்கும் ஒரு விடுதலை இயக்-கத்தைத் தடை செய்ய வேண்டுமானால், அது தொடர்பான இந்திய அரசியல் சட்டத்தையும் திருத்த வேண்டியிருக்கும் என்று சட்ட அமைச்சகம் கூறியது. இத்தடையை அடிப்படையாக, ஒரு கைக் கருவியாக, வைத்துக் கொண்டு, தமிழக ஆளுங் கட்சி தன்னுடைய அரசியல் எதிரிகளை ஒடுக்கவும் செய்யலாம் என்றும் உள்துறை அமைச்சகம் கருத்துத் தெரிவிக்கத் தவறவில்லை. இன்னும் விடு-தலைப் புலிகளின் சொந்த நாட்டிலேயே அவர்களின் இயக்கம் தடை செய்யப் படாத பொழுது, இந்திய அரசு அதைத் தடை செய்வது சரியாக இருக்காது என்றும் அது கருத்துக் கூறியதாகத் தெரிகிறது. இவ்வாறான தடை செய்வதால் தேவையில்லாத விளைவுகளும், இழப்புகளும்தாம் ஏற்படும் என்றும் வெளியுறவுத் துறை அதிகாரிகள் கருத்துக் கூறி-யுள்ளனர்.

ஆனால், செயலலிதாவின் முரட்டுத்தனமான வலியுறுத்தத்தால், இத்தனைக் குழப்பங்களுக்கும் மேலாக, தொடர்புள்ள அமைச்சகங்களின் அதிகாரி-களின் அறிவுரைகளையும் புறக்கணித்து விட்டு, சவாண் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மே மாத இடையில் திடுமென, இந்த அரசியல் சட்டத்திற்கு எதிரானது என்று அதைத் தடை செய்திருக்கிறார்.

இதில் எந்தவொரு ஞாயமும் இல்லை; அரச தந்திரமும் இல்லை; நாட்டின் அமைதிக்கு உகந்த-தாகவும் இல்லை என்பதை இந்திய அரசு-குறிப்பாக நரசிம்மராவும், சவாணும் உணரப் போகிறார்கள்,

மற்றபடி செயலலிதாவுக்கு இத் தடைமுடிவு தம் அரசியல் தில்லு முல்லுகளை மக்கள் உணராத வண்ணம் செய்வதற்கு உதவியாகவே இருக்கும் என்பதைத் தவிர, வேறு எதிர் விளைவுகளோ தம் ஆட்சிக்கு இடராகவோ இருக்கும் என்று அவர் எதிர்பார்ப்பதற்கு இடமில்லை. அப்படியே ஏதாவது தமக்குத் தொல்லைகள் வந்தாலோ, ஒரு வேளை ஆட்சியே அசைவு கண்டாலுமோ, செயலலிதா அதற்காக அஞ்சப்போவதோ வருந்தப்போவதோ இல்லை. அட்படி இசகு பிசகாக எதுவும் நடந்து விடும் என்பதை அவர் நம்பவும் அணியமாக இல்லை. அவ்வாறு ஒரு நிலை வருமானால், செயலலிதா தன் அரசியல் ஈடுபாடு, கலைஞர் எதிர்ப்பு, கட்சிப் பூசல்-கள், தாம் வாய் தவறிக் கூறியிருக்கும் மக்கள் நல

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

நிறுவனர்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

தலைமையகம்: பறம்பை அறிவன், பொதுச் செயலாளர், பறம்புக்குடி. 623 707. முகவை மாவட்டம், தமிழகம்.

## செய்திகள், கருத்துகள், செயற்பாடுகள்!

**1. அமர்த்த அறிவிப்பு—5. (28-3-92)**

*சார்பு அமைப்பு. 2. உ.த.மு க.(பண்பாடு...) செயலகச் சார்பு.*

*திருக்குறள் இயக்கம்.*
நெறியாளர்: *பேரா.வீ.முத்துச்சாமி* க.மு.மெய்.மு.
44, அ முத்துச்சாமி நகர்,
சிவகங்கை. 623 561

*சார்பு அமைப்பு: 1. உ.த.மு.க.—தமிழகம்.*
*தமிழினக் காப்பு அறக்கட்டளை*
நெறியாளர்: *சொ.பகீரத நாச்சியப்பன்*
மேகலைத் தெரு
31, செந்தமிழ் நகர்,
சிவகங்கை. 623 561

*மாவட்ட அமைப்பாளர் (உ த.மு.க.)*
O *திருநெல்வேலி கட்ட பொம்மன் மாவட்டம்.*
திரு *மா.இளஞ்சித்திரன்*
மே/பா. மா.கனகராசு.
97, மேல்முகம், காமராசர் தெரு
கல்லிடைக் குறிச்சி. 627 416

**2. அமர்த்த அறிவிப்பு—6 (8-4-92)**

*மாவட்ட அமைப்பாளர் (உ.த.மு.க)*
O *திருச்சிராப்பள்ளி மாவட்டம்.*
திரு: *குழந்தை ஈகவரசன்*
'தென்மொழி' இல்லம்,
எச் சி /364, அண்ணா நகர்,
திருச்சி-16.

*உ.த.மு.க. (கருநாடகம்) அமைப்பாளர்:*
உயர்திரு. *ந.தமிழ் மறவன்.*
118, ஐந்தாவது குறுக்கு, சோமேசுவரபுரம்,
அல்சூர், வெங்களூர்-560 008.

*உ.த.மு.க. தலைமைக்குழுக் கருத்தாளர்:*
*ஆராய்ச்சி அறிஞர்*
உயர்திரு. குணா,
3155/ஏ, 11ஆவது தலைமை
(HAL) வீதி IIஆம் நிலை.
வெங்களூர் 560 008.

*சார்பு அமைப்பு:*
*உ.த.மு.க. நூல் பரப்புதல்—விற்பனையகம்*
அலுவலகம்: 'தென்மொழி இல்லம்,'
எச்.சி/364, அண்ணா நகர், திருச்சி-16.
நெறியாளர்: திரு. *குழந்தை.ஈகவரசன்.*

*முகவரி மாறுதல் அறிவிப்பு.*

தலைமையகப் பொருளாளர் முகவரி மாறி உள்ளார். இனி, தொடர்பு கொள்ள, அவர் தம் முகவரி:

திரு. *நா.வினைதீர்குன்றன்,*
'திருவள்ளுவர் இல்லம்,'
இ.எண்: 6. கண்ணதாசன் தெரு,
சிறீராம நகர், கோட்டையூர்,
பசும்பொன் மாவட்டம்-628 106.

**3. அமர்த்த அறிவிப்பு—7 (7-5-92)**

*துணைச் செயலாளர்.தலைமையகம்.*
O *உ.த.மு.க. (தூய தமிழ் ஆய்வியக்கம்) செயலகம்:*
உயர்திரு.*கா.செ.சாகுல் அமீது* க.இ.பெ.சி.ப.
'கண்மணி இல்லம்'
7—2—34, வர்வா இராவுத்தர் தெரு,
சித்தையன் கோட்டை,
அண்ணா மாவட்டம் 624 708.

O *சார்பு அமைப்பு:*
நெறியாளர்: *தமிழ்வழிக் கல்வி இயக்கம்.*
உயர்திரு. *தெ.சாலமோன் ராசு.* க.மு.கல்.இ.
பெரியார் இல்லம்,
மல்லாங்கிணற்றுச் சாலை, காந்தி நகர்
விருது நகர் 626 001.

உ.த.மு.க. பொ.உ.ம.எண்/ஏப்-92/1-4 92

**அயலக அமர்த்த அறிவிப்பு—I. (1-4-92)**

*உ.த.மு.க. தலைமைக்குழு கருத்தாளர்,*
*உ.த.மு.க (பிரான்சு) அமைப்பாளர்*
திரு. *தனராசு. அரிமா வளங்கோ*
M.Mme DHANARAJU ARIMA.
No. 3 Rue Haute du Tertre
Appt. 449—Bp,44.
95020 CERGY PONTOISE CEDEX, FRANCE

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# புலிகளுக்கு எதிராகப் பொய்கள், புரளிகளே பரப்பப்படுகின்றன!

(விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களில் ஒருவரான மாவீரர் மாத்தையா 'நக்கீரன்' இதழ்க்கு அளித்த நேருரை! (4-4-92)

இலங்கை அரசுக்கு எதிரான போரில், புலிகளுக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுவது, சிங்கள அரசின் திட்டமிட்ட பொய்ப் பரப்புதலே ஆகும். அவர்கள் ஒன்று மறியாப் பொதுமக்களைக் கொன்றுவிட்டுப் புலிகளை அழித்து விட்டதாகப் பொய்க் கருத்துகளைப் பரப்புகிறார்கள்.

பொதுவாகக் கருவியேந்திய போராட்டம் உயிரிழப்பு இல்லாமல் இருக்க முடியாது. புலிகளை அழித்ததாகச் சிங்கள அரசு கூறியுள்ள புள்ளி விளக்கங்களைத் திரட்டினால், அது இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் எண்ணிக்கையையும் தாண்டிவிடும்!

போராளிகள் சோர்வடைந்து விட்டதாகவும் அதனால் போர் நிறுத்தத்தை விரும்புகிறார்கள் என்றும் கூறப்படுகிறது. எந்த நேரத்திலும் தாக்குதல் நடக்கும் என்ற சூழ்நிலை இருக்கும் போது சோர்வு எப்படி வரும்? போர் நிறுத்தத்தை எங்கள் தலைமையுந்தான் விரும்புகிறது, வரவேற்கிறது. ஆனால் அது தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளுக்கு சிங்கள அரசு உடன்படுவதைப் பொறுத்திருக்கிறது.

யானையிறவுப் போரில் புலிகளுக்குப் பெரிய அளவில் சேதம் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பரம்பரையான முறைப்படி சீருடை அணிந்து போரிட வேண்டும் என்ற எங்கள் முதல் கட்ட வெள்ளோட்ட முயற்சிதான் அது. பின் வாங்குவது என்பது போர் உத்திகளில் ஒன்று. ஆனாலும் எம் வலிவு எவ்வளவு என்பதை, எமது புதிய போர் உத்திகளால் சிங்கள அரசுக்குப் புரிய வைத்துள்ளோம். நாங்கள் நடத்துவது போர்! விளையாட்டுப் போட்டியன்று, இழப்பே இல்லாமல் இருக்க...!

விரைவில் மிகப் பெரிய தாக்குதல் நடத்திப் புலிகளை ஒட்டு மொத்தமாக ஒழித்து விடுவோம் என்று சிங்களப் படைத் துறையினர் தரப்பில் ஆணித்தரைவாகச் சொல்லப்படுகிறது!

ஆனால், முன்னர் யாழ்க் கோட்டையைப் பிடித்துவிட்டோம் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டவர்கள் ஏன் அதை விட்டுவிட்டு ஓடினார்கள்? புலிகளை அழிக்கிறோம் என்னும் பெயரில் வானூர்தியிலிருந்து குண்டு வீசிப் தமிழ்ப் பொது மக்களை அழித்து வருகிறார்கள்! அவர்கள் நடத்தும் மாந்த நேய அத்துமீறல்களைக் கண்டிக்கத்தான் யாருமே முன் வர மறுக்கிறார்கள்!

நாங்கள் தமிழீழம் என்னும் கோட்பாட்டை அடைந்து விடுவோம் என்பதைக் காலமே உறுதி செய்யும்.

முன்னாள் இந்தியத் தலைமையமைச்சர் இராசீவை எங்களது புலிகள் இயக்கந்தான் கொலை செய்தது என்பதற்கு அடிப்படைச் சான்றுகள் இந்தியாவிடம் இருப்பதாகச் சொல்லப்படுவது வீண்பழியான் (அபாண்டமான) பெரும் பொய்.

எங்களுக்குக் கிடைத்த செய்திகளின்படி இந்தியப் படைத் துறையினரால் கற்பழிக்கபபட்ட ஒரு பெண், சிலருடன் சேர்ந்து அமெரிக்க உளவு நிறுவன (சி.ஐ.ஏ.) உதவியுடன் அக்கொலையைச் செய்திருப்பதாகத் தெரிகிறது. அதற்கு எங்களைப் பொறுப்பாளியாக்குவதைக் கண்டித்து நாங்கள் ஏன் கடுமையான அறிக்கை விடவில்லையென்றால், அறிக்கை விடுவதெல்லாம் அரசியல்காரர்களின் செயல்கள். கருவியேந்திய போராளிகள் அது போன்ற பணியை மேற்கொள்வதில்லை.

அதுபோலவே பத்மநாபாவைக் கொடுமையாகக் கொலை செய்ததும் நாங்கள்தான் — எங்கள் இயக்கந்தான் — என்றும் சொல்லப்படுகிறது. நாங்கள் பிறருடைய மண்ணிலிருந்து எந்தச் செயலையும் செய்ததில்லை. எங்கள் இயக்கத்தில் கடுமையான கட்டுப்பாடுகள் உண்டு. கட்டுப்பாட்டை மீறியதற்காக எம் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்டவர்கள், எங்கள்மீது பழியைப் போடுவதற்காகச் செய்ததுதான் பத்மநாபா கொலை. சொல்லப் போனால், வரதராச பெருமாளைவிட பத்மநாபா ஒன்றும் எமக்கு அதிக இரண்டகம் (துரோகம்) செய்துவிடவில்லை.

எங்கள் தலைவர் பிரபாகரனுக்கு இந்தியப் படைத்துறை பிடிஆணை (வாரண்ட்) பிறப்பித்துள்ளதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். அனைத்துலக அறமன்றத்திற்கு வரட்டும் அதை நாங்கள் சந்திக்க அணியமாக இருக்கிறோம்.

அடுத்து, இந்தியா செய்த உதவிகளை மறந்து விட்டு நாங்கள் இந்தியாவிற்கு இரண்டகம் செய்து விட்டதாக எங்கள் மேல் குற்றஞ்சாட்டுவது பற்றி எங்களிடம் கேட்கிறீர்கள். இதுபோன்ற கேள்விகளை, இந்தியப் படைத்துறை உள்முகக் கமுக்கங்களை, ஒரு புட்டில் 'விஸ்கி'க்கு விற்றவர்களிடம்

(9-ஆம் பக்கம் பார்க்க)

Scanned with CamScanner

# கருநாடக மாநிலப் படுகொலைகள் தரும் பாடம்!

• தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

அண்மைக் காலத்தே கருநாடக மாநிலத்தில் நம் தமிழினத்தார் படுகொலை செய்யப்பட்டதையும், பல்வாறு பாடுபடுத்தப் பட்டதையும் இங்கிலாந்து நாட்டிலிருந்து வெளிவரும் **'சன்டே அப்சர்வர்'** (Sunday Observer) எனும் ஆங்கிலத் தாளிகையில் படித்தேன். கல்லும் கூடக் கரைந்து விடும் அதைப் படித்தால். குழந்தைகள் முதல் பெரியோர் வரையிலும், ஆண், பெண் என்ற வேறுபாடில்லாமல் தமிழினத்தார் பலர் கருநாடகத்தில் கொல்லப் பட்டதையும், தமிழ்ப் பெண்டிர் நூற்றுக் கணக்கானவர் கற்பழிக்கப்பட்டதுடன், மேலும் பல வகையில் மிகவும் கொடுமையாக உடற்சிதைவுகள் (சித்திரவதை, torture) செய்யப்பட்டதையும் அத்தாளிகை எழுதியிருந்தது. கருநாடக அரசியல் தலைவர்களும், கருநாடகக் காவல் துறையினரும் (police) இவ்வாறு நம் தமிழினத்தார் கொடுமைப் படுத்தப் பட்டதையும் கொல்லப் பட்டதையும் பார்த்தும் பாராதது போலிருந்ததையும், அரசியல் தலைவர்கள் சிலரும், காவல் துறையினரும் தமிழினத்தாரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட சொத்துகளைப் பங்கு போட்டுக் கொண்டதையும் அந்தத் தாளிகை அம்பலப்படுத்தியது.

கருநாடக மாநிலத்தில் ஆண்டாண்டுக் காலமாக வாழ்ந்து வந்த நம் தமிழினத்தார் (ஆண், பெண், முதிர் அகவையுடையோர், சிறுவர், சிறுமியர், பச்சிளங் குழந்தைகள்) பெருமளவில் கொல்லப் பட்டபோது, தமிழ்ப் பெண்கள் பெருவாரியாகக் கற்பழிக்கப்பட்டபோது, தமிழரின் சொத்துகள் தீயிடப்பட்டபோது அல்லது கொள்ளையடிக்கப்பட்டபோது, இந்திய அரசு என்ன செய்தது? பல கோடிப் பணம் செலவு செய்து பெரிய படையொன்றை அமைத்து வைத்திருக்கிறதே, அந்தப் படையின் நூறு வீரர்களையாவது அனுப்பிக் கருநாடகத் தமிழரின் உயிரையும், உடலையும், உடைமையையும் பாதுகாத்ததா? இல்லவே இல்லை! ***தமிழர்கள் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் இந்தியப் படைக்காகச் செலவு செய்யப்படும் பலகோடி உருபாக்களில் பத்தில் ஒரு பங்கு தமிழனின் வரிப்பணம் தான்.*** (இந்தியப் படைக்கான செலவு ஆண்டுக்கு உருபா 13,000 (பதிமூன்று ஆயிரம்) கோடிக்கு மேல், அதில் ஏறத்தாழ ஆயிரத்து ஐந்நூறு கோடி உருபா (1500 கோடி உருபா) தமிழனின் வரிப்பணம்). ஆனால் இந்தியப் படையோ தமிழர்கள் கருநாடகத்தில் படுகொலை செய்யப்பட்டபோது, அவர்களின் பாதுகாவலுக்காகப் பயன்படுத்தப்படவில்லை, ***இந்தியப் படை தமிழினத்தை அழிக்கப் பயன்படுத்தப் படுமேயல்லாமல், தமிழர்களைக் காக்கப் பயன்படுத்தப் படமாட்டாது.***

இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் தம் அப்பன் வீட்டுச் சொத்து போலக் கருதுகின்றனர் வட இந்தியர். இந்தியப் படையைத் தமது (வட இந்தியரின்) நலனைக் காக்கின்ற ஒரு காவற் படையாகத்தான் கருதுகின்றனரே தவிர, இந்தியப் படை இந்தியத் துணைக் கண்டத்தே வாழுகின்ற பிற தேசிய இனத்தவரையும் பாதுகாக்க வேண்டிய படை என்று கருதுவதில்லை வட இந்தியர்.

ஓர் எடுத்துக் காட்டு, சில ஆண்டுகளுக்கு முன் வட மாநிலத்தில் (உத்தரப் பிரதேசத்தில்) ஏழெட்டு இந்திக்காரரை சீக்கிய இளைஞர்கள் கொன்றவுடன், ஆயிரக்கணக்கான இந்தியப் படை வீரர்கள் இந்திக் காரருக்குப் பாதுகாவலாக அனுப்பப்பட்டனர். ஆனால் கருநாடகத்திலே தமிழர்கள் பெருமளவில் கொன்று கொடுமைப் படுத்தப்படும்போது, ஐயகோ, இந்திய அரசு ஒரு நூறு படை வீரர்களைக் கூடப் பாதுகாவலுக்கு அனுப்ப மறுத்து விட்டது.

வெள்ளைக்காரன் இந்தியத் துணைக் கண்டத்தை ஆண்டபோது, இந்தியத் துணைக் கண்டத்தின் எல்லாத் தேசிய இனங்களையும் அடிமையாக ஆண்டானெனினும், எல்லாத் தேசிய இனங்களையும் பாதுகாத்தான். **வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில் ஒரு தமிழன் கூட பிற மாநிலங்களில் கொல்லப் படவில்லை.** ஆனால் வட இந்தியனின் ஆட்சி 1947-இல் ஏற்பட்டதிலிருந்து, கடந்த 45 ஆண்டுகளில் தமிழன் கேரளத்திலும், மகாராட்டிரத்திலும், பம்பாயிலும் கருநாடகத்திலும் அடித்து நொறுக்கப்பட்டு விரட்டியடிக்கப் பட்டிருக்கிறான்; கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறான்; — கொல்லப் பட்டிருக்கிறான். ***ஒரு முறையேனும் இந்திய அரசு இந்தியப் படையைத் தமிழனுக்குப் பாதுகாவலாக அனுப்பவில்லை.***

கருநாடகத்தில் மட்டுமா? ஈழத்தைப் பாருங்கள். ஈழத் தமிழர்களைச் சிங்களவர்கள் அடித்து நொறுக்கிக், கொள்ளையடித்துக், கற்பழித்துக், கொன்று குவித்த போதெல்லாம், இந்திய அரசு இந்தியப் படையைத் தமிழினத்துக்கு உதவி செய்ய அனுப்பவில்லை. ஆனால் 1987-இல் தமிழ் ஈழ மக்களின் நலனுக்காக, தமிழ் ஈழ மக்களின் பாதுகாவலுக்காகப் போரிட்ட தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கை ஓங்கி, ஈழத்தை அவர்கள் சிங்களவரின் பிடியிலிருந்து விடுவிக்கக் கூடும் என்ற நிலை ஏற்பட்டதும், இந்தியாவின் அன்றைய

தலைமையமைச்சர் இராசீவ் இந்தியப் படையை ஈழத்துக்கு அனுப்பி ஈழ விடுதலைக்கு முட்டுக் கட்டை போட்டார். இவ்வாறாக, ஈழத் தமிழருக்கு உதவியாக இந்தியப் படையை அனுப்ப மறுத்த இந்திய அரசு, ஈழத் தமிழரின் கை ஓங்கியபோது சிங்கள அரசுக்கு உதவியாக இந்தியப் படையை அனுப்பி வைத்தது.

கருநாடகத்திலும், ஈழத்திலும் மட்டுமா? கச்சத் தீவிலே என்ன நடக்கிறது? காலங் காலமாகத் தமிழ் நாட்டு மீனவர்கள் கச்சத் தீவருகே மீன் பிடித்து வந்திருக்கிறார்கள். இப்போது கச்சத் தீவருகே தமிழ் நாட்டு மீனவர்கள் போனால், சிங்களவரின் கடற்படையால் கொல்லப்படுகிறார்கள் — விரட்டியடிக்கப்படுகிறார்கள் — படகுகள் அழிக்கப்படுகின்றன. பலகோடி உருபா செலவழித்து (அதில் பத்திலொரு பங்கு தமிழனின் வரிப் பணம் தான்) பெரிய பெரிய போர்க் கப்பல்களை வாங்கி வைத்திருக்கிறதே இந்தியக் கடற்படை, அவை தமிழ்நாட்டு மீனவரின் பாதுகாவலுக்காக அனுப்பப்பட்டதா? இல்லவே இல்லை.

ஆனால் இந்தியக் கடற்படை கிழக்காசிய நாடுகளிலிருந்து ஈழத்துக்குப் படைக் கருவிகளைக் கொண்டு செல்லும் கப்பல்களைத் தடுத்து நிறுத்தி கோடிக்கணக்கான உருபா மதிப்புள்ள படைக் கருவிகளைக் கைப்பற்றித் தமிழீழ விடுதலைக்கு முட்டுக்கட்டை போட முயல்கிறது. தமிழ் ஈழ மக்களைச்சிங்களப் படையின் தாக்குதல்களினின்று பாதுகாக்கப் பலகோடி உருபாச் செலவில் கிழக்காசியா மற்றும் பிற நாடுகளிலிருந்து வாங்கி, ஈழத்துக்குக் கப்பல் வழியாகக் கொண்டு போகப்படும் படைக் கருவிகள் இவை. இப்படைக் கருவிகள் இந்தியப் படைக்கெதிராகப் போரிட இந்தியாவுக்குக் கொண்டு வரப்படும் படைக் கருவிகளல்ல. இவை சிங்களவப் படைக்கெதிராகப் போரிட, ஈழத்துக்குக் கொண்டு போகப்பட்ட படைக் கருவிகள், இவற்றை இந்தியக் கடற்படை தடுக்கவோ, கைப்பற்றவோ எக்காரணமுமில்லை. ***தமிழினத்தின் மீது வட இந்திய அரசு கொண்டுள்ள காழ்ப்புணர்வும், தமிழ் ஈழம் விடுதலை பெற்று விடக் கூடாதென்ற வஞ்சகவுணர்வுமே காரணம்.***

எண்ணிப்பாருங்கள் தமிழர்களே! கருநாடகத்திலே நம் தமிழினம் சீரழிக்கப்படுகிறது. ஒரு நூறு இந்தியப் படை வீரர்களைக்கூட கருநாடகத்தமிழர்களின் பாதுகாவலுக்காக அனுப்ப மறுத்தது இந்திய அரசு. ஆனால் சிங்கள அரசுக்கு உதவியாக ஈழத் தமிழருக்கெதிராக, அரையிலக்கத்துக்கு மேலான இந்தியப் படைவீரர்களை 1987-இல் அனுப்பி வைத்தது இந்திய அரசு. அந்தக் காட்டு விலங்காண்டிப் படை தமிழ் ஈழத்திலே தமிழ்ப் பொதுமக்கள் பல்லாயிரம் பேரைக் கொன்றது. பல நூறு தமிழ்ப் பெண்களைக் கற்பழித்தது. கோடிக்கணக்கான பணமதிப்புள்ள தமிழ்ச் சொத்துக்களைச் சூறையாடியது. இன்று கருநாடகக் காலிப் பயல்களும், அரசியல் தலைவர்களும், காவலர்களும் (police) கருநாடக மாநிலத்திலே வாழ்ந்த தமிழர்களுக்கு எதிராக இழைத்த கொடுமைகளை, அன்று இந்தியப் படை தமிழ் ஈழத் தமிழருக்கு எதிராக இழைத்தது.

எண்ணிப் பாருங்கள் தமிழர்களே! வெள்ளைக்காரன் ஆண்டபோது, அவன் நடுநிலையான உணர்வோடு காவிரி நீரைக் கருநாடக மாநிலம் தமிழ் நாட்டோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று தீர்வு பகர்ந்தான். ஆனால் வெள்ளைக்காரன் ஆட்சி மாறி வட இந்தியன் ஆட்சி வந்த பின் நிலை மாறியது. இந்திய உச்சநெறி மன்றம் (Indian Supreme Court) கருநாடகம் தமிழ் நாட்டுக்குக் காவிரி நீரை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று முடிவு கூறியிருக்கிறது. இந்நிலையிலாவது வட இந்திய அரசு அம்முடிவை நிறைவேற்றும்படி கருநாடக மாநிலத்துக்குக் கட்டளையிட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்யவில்லை வட இந்திய அரசு. ***தமிழ் உழவன் பட்டினி கிடந்தால் அதுபற்றிக் கவலையில்லை வட இந்திய அரசுக்கு.***

"இந்தியா" என்ற நாட்டிலே தமிழனுக்கு ஞாயம் கிடைக்க வழியில்லை. "இந்தியா" என்ற நாட்டிலே தமிழனின் உயிருக்கும், உடலுக்கும், உடைமைக்கும் பாதுகாப்பில்லை. பல்லாயிரம் கற்கள் தொலைவில், கடல் கடந்து அமெரிக்காவில் வாழும் தமிழர்களை யாரும் துன்புறுத்துவதில்லை. அவர்கள் மதிப்புடனும், மானத்துடனும் வாழ முடிகிறது. ஆனால் நம்நாடு என்த் தமிழர் பலர் கருதுகின்ற இந்தியாவிலே; தமிழன் கொள்ளையடிக்கப்படுகிறான்; கற்பழிக்கப்படுகிறான்! கொல்லப்படுகிறான். தமிழ்நாடு மாநில அரசு எவ்வளவோ வேண்டிக் கேட்டும், கருநாடகத்துக்கு இந்தியப் படையை அனுப்பிக் கருநாடகத் தமிழருக்குப் பாதுகாவல் கொடுக்க மறுத்தது இந்திய அரசு. 1965-இல் தமிழ்நாடு ஒட்டு மொத்தமாக இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட்டம் நடத்தியதைத் தடுக்க இந்தியப் படையை அனுப்பி வைத்து ஐந்நூற்றுக்கு மேலான தமிழ் இளைஞர்களைக் கொன்ற இந்திய அரசு, இன்று தமிழன் கருநாடக மாநிலத்திலே கொல்லப்பட்டபோது, நேற்று தமிழன மகாராட்டிர மாநிலத்திலே கொல்லப்பட்டபோது, நேற்றைக்கு முந்திய நாள் தமிழன் கேரள மாநிலத்திலே கொல்லப்பட்டபோது, இந்தியப் படையைத் தமிழனின் பாதுகாவலுக்கு அனுப்ப மறுத்தது. இந்தியப் படை தமிழனைக் கொல்லத்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர, தமிழனைக் காக்கப் பயன்படுத்தப்பட்டதில்லை. இந்தியன் ஆட்சி ஏற்பட்ட 1947-

இலிருந்து இன்று வரையிலுமுள்ள நிகழ்ச்சிகளை ஆய்ந்து பார்ப்போர் இந்த உண்மையை உணர்ந்து கொள்ள முடியும்.

**தமிழ்நாடு இந்தியாவினின்று விடுதலை பெற்றுத், தனி நாடாக அமைவதே தமிழினத்-துக்கு நீடித்த நலன் விளைக்கும்.** தமிழகம் இன்று விடுதலை பெற்ற தனி நாடாக இருக்குமேயானால், கருநாடகத்தில் வாழும் தமிழர்கள் இத்துணைக் கொடுமைப்படுத்தப்பட்டிருக்க மாட்டார்கள். தொடக்கத்தில் வெங்காலூரில் தமிழரின் சொத்து-கள் சூறையாடப்பட்டுத் தீவைக்கப்பட்டவுடனேயே, விடுதலை பெற்ற தனி நாடான தமிழகம் அதனை உலக ஒன்றிப்பு நாடுகளின் அவையில் (ஐக்கிய நாடுகளின் சபை. United Nations) தெரிவித்து, தமிழருக்கு எதிராக நடக்கும் கொடுமைகளைத் தடுத்திட வேண்டும் என்று முறையிட்டிருக்கும். உலக ஒன்றிப்பு நாடுகளும் "கருநாடகத் தமிழர் கொடுமைப்படுத்தப்படுவது தவறு" என்று கண்டனத் தீர்மானம் போட்டிருக்கும். ஆனால் இன்று தமிழ்நாடு விடுதலை பெற்ற தனி நாடு அன்று. இந்தியாவின் ஒரு மாநிலமாக இருக்கிறது. அதனால் உலக ஒன்றிப்பு நாடுகளிடம் முறையிட வழியில்லை. அதனால்தான் தமிழ்நாடு மாநில முதலமைச்சர், இந்தியத் தலைமையமைச்சரிடம் முறையிட வேண்டிய நிலையேற்பட்டது. ஆனால் இந்தியத் தலைமையமைச்சரோ தமிழ்நாடு மாநில முதலமைச்சரின் முறையீட்டுக்கு எந்த வகை மதிப்பும் கொடுக்கவில்லை. கருநாடகத் தமிழரின் பாதுகாவலுக்காக இந்தியப் படை வீரர்களை அனுப்ப மறுத்தார். இவ்வாறு தமிழ்நாடு மாநில முதலமைச்சரின் முறையீட்டை ஒரு பொருட்-டெனக் கருதாத இந்தியத் தலைமையமைச்சர், தமிழகம் விடுதலை பெற்ற தனி நாடாக விருந்து, உலக ஒன்றிப்பு நாடுகளின் அவையிலே முறை-யிட்டு, அந்த அவை கண்டனத் தீர்மானம் நிறை-வேற்றியிருக்குமேயானால், அதற்குத் தக்க மதிப்-பளித்திருப்பார். கருநாடகத் தமிழருக்கெதிரான நடவடிக்கைகளை முளையிலேயே கிள்ளியெறிந்-திருப்பார். கருநாடகத் தமிழரைப் பாதுகாக்க உடனடியாக இந்தியப் படையை அனுப்பியிருப்-பார். பெரும்பாலான தமிழரின் உயிரும், சொத்து-களும், தமிழ்ப் பெண்களின் கற்பும் காக்கப்பட்டி-ருக்கும்.

**தமிழகம் விடுதலை பெற்ற தனி நாடாக இருந்திருக்குமேயானால், காவிரி நீர்ச் சிக்கலும் கூட இனிதே தீர்ந்து பட்டிருக்கும்.** தமிழகம் விடுதலை பெற்ற தனி நாடாக இருந்திருக்குமே-யானால், கருநாடக மாநிலம் காவிரி நீர் தமிழகத்-துக்கு வராமல் தடுப்பது பற்றி உலக அறமன்றத்-தில் (World Court) முறையிட்டிருக்கும். தமிழ-கத்தின் பக்கத்தில்தான் ஞாயம் இருக்கிறதென்-பதை இந்திய உச்ச நெறி மன்றமே (Indian Supreme Court) கூறியிருக்கிறது. இதே முடி-வைத்தான் உலக அறமன்றமும் கூறியிருக்கும். உலக அறமன்றத்தின் முடிவுக்கு இந்திய அரசு இணங்க வேண்டியிருக்கும். இந்திய அரசு காவிரி நீரைவிட்டுக் கொடுக்கும்படி கருநாடக மாநிலத்-தைக் கட்டாயப்படுத்தியிருக்கும். ஆனால் இன்-றைய நிலையில் (தமிழ்நாடு இந்தியாவுக்கு அடிமைப்பட்ட மாநிலமாக இருக்கும் நிலையில்) நீ தமிழகத்துக்குக் கிடைக்க வேண்டிய காவிரி நீரின் ஒரு சிறு பகுதியை மட்டுமே கருநாடக மாநிலம் விட்டுக் கொடுக்க விரும்புகிறது. தமிழ் உழவர்கள் வாயடித்து, வயிறடித்து அரைப் பட்டினி வாழ்வு நடத்தும் நிலை தொடரும்

இன்றைய அவல நிலைகளெல்லாம் மாற, தமிழக உழவர் முதல் நிலக்கிழார் வரை வளம் பெற, இந்தியத் துணைக்கண்ட மாநிலங்களில் வாழும் தமிழர் தம் உயிரும், உடலும், உடைமை-களும் பாதுகாக்கப்பட, தமிழகம் விடுதலை பெறு-வதே வழி. ஆதலின் தமிழக விடுதலைக்கான நம் பணிகளைப், போராட்டங்களை மேலும் பெருக்கிக் கொள்வோம். இதுவரையிலும் தமிழக விடுதலை-யில் அக்கறை செலுத்தாதாரும், தமிழக விடுதலைப் போராட்டங்களிலும், பணிகளிலும், தங்களை ஈடு-படுத்திக் கொள்ளட்டும்! ○

# பூணூலின் நீளம் அதிகமாகிறது

குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், தலைமையமைச்சர், இந்திய அமைச்சர்-கள், உச்சவழக்குமன்றத் தலைவர், போர்ப்படைத் தலைவர், தலைமைத் தேர்தல் ஆணையாளர், அணு உலைத் தலைவர், அணு ஆற்றல் துறைத் தலைவர், அரசுத் துறைத் தலைவர்கள், ஐ.ஏ.எசு., ஐ.பி.எசு., ஐ.எஃப்.எசு. பிரிவு 1, 2 அலுவலர்கள், வங்கித் தலைவர்கள், வெளி நாட்டுத் தூதர்கள் என்றவாறு ஏற்கனவே நீண்டு இருக்கிற பூணூலின் நீளம் இன்னும் கொஞ்சம் நீண்டு—தமிழக ஆட்சியில்—முதல-மைச்சர், தலைமைச் செயலர், காவல் துறை ஆணையர், அரசுத் தலைமை வழக்கறிஞர் என்று அதிகமாகிக் கொண்டே வருகிறது!

— நன்றி 'தாயகம்' ○


பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

**ஓ! ஓ! தமிழர்களே!**

கடந்த 17-2-91-இல் ஈரோட்டில் நடந்த உ.த.மு.க. இரண்டாவது மாநாட்டில் ஆசிரியர் செய்த அரிய சிறப்புச் சொற்பொழிவு நூல்!

வெள்ளைத்தாள் பதிப்பு: 9-00
செய்தியச்சுத்தாள் பதிப்பு: 6-50
நூல் அஞ்சல் செலவு: 3-00.
தென்மொழி, சென்னை-5


Scanned with CamScanner

# இந்தியாவில் காவல் துறையினரின் கொடுமைகள்! அனைத்துலக மக்கள் உரிமைக் கடிதத்தில் கண்டன அறிக்கை!

இலண்டனில் அனைத்துலக மக்கள் உரிமைக் கழகம் செயல்பட்டு வருகிறது. இக்கழகம் உலக நாடுகளில் மக்கள் உரிமைகளை நசுக்கி, மக்களை முகாமையாகக் காவல் துறை, படைத் துறை இவற்றால் குற்றஞ்சாட்டித் துன்புறுத்தும் கொடுமைகளைக் கண்டித்து, அவ்வப்பொழுது கண்டனம் தெரிவித்து அறிக்கைகளை உலக முழுவதும் உள்ள நாடுகளுக்கும், உலக ஒன்றியப் பேரவை (ஐ நா.வு)க்கும் அனுப்பி வைக்கும்.

கடந்த மார்ச்சு மாதம் இக்கழகம் இந்தியாவில் மக்கள் உரிமைகள் பறிக்கப்படுவதாகவும் ஆட்சியதிகாரிகள் மக்களைக் குற்றங்கள் சாட்டித் துன்புறுத்துவதாகவும் மிகவும் கொடுமைபபடுத்துவதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கையின் தலைப்பே, ***"இந்தியா — காவல் துறைக் காவலில் உறுப்புச் சிதைவு (சித்திரவதை), கற்பழிப்பு, சாவுகள்"*** என்பது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப் பெற்றுள்ள விளக்கம் வருமாறு :

"ஐயத்தின் (சந்தேகத்தின்) மேல் பிடிபடுவோரை, உறுப்புச் சிதைவு (சித்திரவதை) செய்வது, கொடுமைப்படுத்துவது இந்தியா முழுக்க உள்ள காவல் துறையினரின் அன்றாடச் செயல்களாக இருக்கின்றன.

காவல் துறையினர் தாக்கியதால் கடந்த சில ஆண்டுகளில் நூற்றுக் கணக்கானவர்கள் உயிரிழந்திருக்கின்றனர். சிறைச் சாலைகளில் பெண்கள் கற்பழிக்கப்படுவதும் வழக்கமான செயலாகி விட்டது.

ஒன்று மறியா ஏழை மக்களைக் கொன்றாலும், அந்த உண்மை உலகுக்குத் தெரிந்து விட்டாலும், எந்தச் சட்டமும் தங்களை ஒன்றும் செய்யாது என்று காவல் துறையினர் கருதியுள்ளனர். இதன் தொடர்பாக அவர்களின் நடவடிக்கை இந்தியா முழுவதும் ஒரே மாதிரியாக அமைந்துள்ளன,

ஏதுமறியா மக்களைக் காவல் துறை பிடித்துச் செல்கிறது. சட்டத்திற்கு மாறாக அவர்களை அடைத்து வைக்கிறார்கள். ஒப்புதல் வாயுரை (வாக்குமூலம்) கொடுக்கும்படி, காவலர்கள் அவர்களைச் சாகும்வரை கொடுமைப்படுத்துகிறார்கள். உறுப்புச் சிதைவு (சித்திரவதை) செய்கிறார்கள்.

இத்தகைய கொடுமைகளுக்கு மேல் அதிகாரிகளும் இசைவளிக்கிறார்கள். படுகொலைகளை மறைக்கிறார்கள். சான்றுளர்(சாட்சி)களை மிரட்டுகிறார்கள். அல்லது கையூட்டுக் (இலஞ்சம்) கொடுத்துத் தங்களுக்குச் சார்பாக — ஆதரவாகத் திருப்புகிறார்கள். இவ்வாறான சூழ்நிலையில் மக்களைக் கொடுமைப்படுத்திக் கொல்லும் காவல் துறையினர்க்கு உயர் அதிகாரிகள் தண்டனை தருவதில்லை. தாக்கப்பட்டு மாண்டு போனவர்களின் குடும்பத்தவர்கள், அல்லது பொதுமக்களின் வலிந்த, தொடர்ந்த போராட்டங்கள் நிகழ்ந்தால் மட்டுமே இத்தகைய காவல்துறைக் குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்கிறது.

காவல் துறையினரால் கொடுமைகள், உறுப்புச் சிதைவுகளுக்கு ஆளாகி மாண்டு போகும் ஆள்களைப் பற்றிய சாவுகளை பெரும்பாலும் மூடி மறைத்து விடுகிறார்கள். அவற்றைப் பற்றிச் சட்டப்படி நடைபெற வேண்டிய கீழ் அறமன்ற நடுவரின் உசாவல்கள் கூட நடைபெறுவதில்லை. காவல்துறை அதிகாரிகள் பதிவேடுகளைத் திருத்துவதாலும், மற்றவர்கள் மீது குற்றங்களைச் சுமத்துவதாலும், அறமன்ற உசாவல்கள் நடந்தாலும்கூட அவை முறைபானவையாக அமைவதில்லை. நடுவர்களும். அரசு மருத்துவர்களும்கூட சான்றுகளைப் பதிவு செய்யாமல், சாவுக்கு வேறு காரணம் காட்டிப் பதிவு செய்து காவல் துறையினரைக் காப்பாற்றி விடுகின்றனர்,

தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர் ஆகியோருக்கு எதிரான குற்றங்களை உசாவல், செய்ய (விசாரணை செய்ய) தனி அறமன்றங்க அமைக்கப் பெறுவதில்லை."

— இவ்வாறு அந்த அறிக்கை கூறுகிறது.

## போராட்டம் தேவை!

அன்புசால் பெருந்தகையீர்!

ஐயா, தொலைக்காட்சியிலும் வானொலியிலும் ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டத்தைக் கண்டும், கேட்டும், கொதித்துக்கிடந்த என் உள்ளம் ":தமிழ்நிலம்" 154-இல தங்களின், சீற்ற உணர்வு கொப்பளிக்கும் கருத்துரையைக் கண்டதும், கொதிப்புத் தணிந்து மகிழ்வு கொண்டது,

எனவே, மக்களைத் திரட்டி, இந்துமத வெறி பிடித்த பார்ப்பனரின், ஆணவத்தையும், திமிரையும் அடக்கி ஒடுக்கும் ஒரு பெரும் போராட்ட நிலையை உருவாக்குமாறு தங்களை வேண்டிக் கொள்கிறேன்

*— பாவலர் சின்னப்பனார், கொம்மக்கோவில்.*

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

போய்க் கேட்க வேண்டிய கேள்வி இது. எமது அறநோக்கப் போராட்டத்தை விளங்கிக் கொண்டு மறைந்த தலைமையமைச்சர் இந்திராவும், முதல்வர் ம.கோ.இரா. அவர்களும், எங்களுக்குச் செய்த உதவிகளை நன்றியுடன் நினைவில் வைத்துள்ளோம். இராசீவும் நல்லவர் தாம். ஆனால் அவர்களுக்குக் கருத்துக் கூறியவர்கள் தாம் எங்களை எதிரியாக விளக்கப்படுத்திக் காட்டி விட்டார்கள்.

தமிழர்களைக் காப்பாற்றத்தானே இராசீவ் அமைதிப் படையை இலங்கைக்கு அனுப்பினார் என்கிறார்கள். 83-இல் கலவரம் தொடங்கியபோதே, இந்தியப் படையை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்று கூறியதை நாங்கள் எதிர்த்தோம். உதவிகள் செய்தாலே போதும் என்று சொன்னோம். எந்த ஒரு போராட்டத்தையும் தாக்குண்டவர்கள் பங்கெடுத்து அவர்களே நடத்துவது -தான் சரியானது.

தமிழர்களின் விருப்பத்திற்கு மாறாகப் புலிகளை ஒடுக்கவும், சிங்களப் படையினர்க்கு உதவவுமே இந்தியப் படையும ஒப்பந்தமும் எம்மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டன. தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக இலங்கைக்குள் வந்த இந்தியப் படை நாலாயிரம் தமிழர்களைக் கொன்று குவித்ததும், பல பெண்களின் கற்பைச் சூறையாடியதும் தாமே அவர்கள் செய்த அருஞ் செயல்கள்!

இப்பொழுது விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யவேண்டும் என்று குறிப்பாக முன்னாள் நடுவண் அமைச்சர் சுப்பிரமணியம் சுவாமியும் மற்றும் சிலரும் வலியுறுத்தி வருவது அனைவரும் அறிந்ததே! சுப்பிரமணியம் சுவாமி ஓர் அமெரிக்க ஒற்றுத்துறை முகவர் (சி.ஐ.ஏ. Agent) என்பது எல்லாருக்கும் தெரியும். இராசீவ் கொலைத் தொடர்பாக எங்கே தம் மீது பழிவந்து விடுமோ என்று அஞ்சி முந்திக் கொண்டு எங்கள் மீது சேற்றை வாரி இறைக்கிறார்.

எம் தலைவர் பிரபாகரன் இலங்கையில் பல பேர்களைக் கொன்று விட்டார் என்றும், அவருடைய தலைக்கு 10 இலக்கம் உருபா பரிசு என்றும் அறிவித்த பின்னர்தானே இந்திய அரசு எமது தலைவருக்கு இடம் கொடுத்துக் கண்ணியமாகப் பெருமைப்படுத்தியது.

இப்பொழுது இராசீவ் கொலைத் தொடர்பாக எந்த அற மன்றத்திலும் வழக்கே இன்னும் தொடங்காத நிலையில் எம் மீது பழி சுமத்தி இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும் என்று சிலர் இவ்வளவு ஆர்வம் காட்டுவதில் என்ன மருமம் இருக்கிறது என்பதுதான் எங்களுக்குப் புரியவில்லை.

எங்களது தீர்த்துக் கட்டும் பட்டியலில் (Hit List) தமிழக முதல்வர் செயலலிதா பெயரும் இருப்பதாக அமைச்சர்கள் பலரும் ஏன் செயலலிதாவே கூட கூறி வருகிறார். தமிழ்நாட்டில் ஆட்சியிலிருப்பவர்கள் தங்களது சரிவைச் சரிகட்ட அவ்வப்போது கிளப்பிவிடும் புரளிகளில் இதுவும் ஒன்று. பெரும்பாலும்(இதுவரை) நாங்கள் அங்கே பகடைக் காயாகத்தான் பயன்படுத்தப் பட்டிருக்கிறோம்.

செல்வி செயலலிதா எங்கள் இயக்கத்தை ஒழிப்பேன், ஒழித்தே தீருவேன், என்று சூளுரை எடுத்துள்ளார் என்று கூறப்படுகிறது. உலகத்திலேயே எந்த ஒரு விடுதலைப் போராட்டத்திலும் இல்லாத அளவிற்குப் பெண்களே கருவியேந்திப் போராடவும் தங்களது உடலையே தீக்கிரையாக்கவும் முன்வந்துள்ள இயக்கந்தான் எமது இயக்கம். அத்தகைய தலைசிறந்த கொள்கை உணர்வைப் பாராட்ட வேண்டிய ஒரு பொறுப்பான இடத்திலுள்ள ஒருவர், எமது இயக்கத்தின் மேல் ஏன் இவ்வளவு வெறுப்புக் கொண்டுள்ளார் என்பதுதான் எமக்குப் புரியவில்லை.

இந்தியாவின் ஆறுகோடித் தமிழர்களின் படிநிகராளியாக உள்ள தமிழக முதல்வர் செயலிதா அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து எம் மக்களின் துயரங்களைக் கேட்டு, அவர்களின் கருத்தை அறிந்துவிட்டு, எம்மைப் பற்றி ஒரு முடிவுக்கு வரட்டும். எம்முடைய பெண் புலிகளே அவருக்குப் பாதுகாப்பாக வர அணியமாக உள்ளனர்; அவரது உயிருக்கு அனைத்து வகை உறுதிப்பாடும் நாங்கள் அளிக்கிறோம்.

அவையின் நடுவே தான் துகிலுரியப்பட்ட போது, தனக்கு ஐந்து கணவர்கள் இருந்தும், யாரும் உதவ முன்வராததால் ஆறுவதாகக் கண்ணனை அழைக்க வேண்டிய நிலையிலிருந்தாள் பாஞ்சாலி. அந்தக் கண்ணோட்டத்தில் எங்களை செயலலிதா பார்க்காமல், தன் ஒரே கணவன் தனக்கு இரண்டகம் செய்தான் என்பது தெரிந்தும் அவன் மதுரையில் கொல்லப்பட்டான் என்று அலட்சியப்படுத்தாமல், மதுரையை எரித்த கண்ணகி நிலையிலிருந்து எமது போராட்டத்தை செயலலிதா பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

சிலர் முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி கடைசியாக அவர் ஆண்ட இரண்டாண்டுக் கால ஆட்சியில் எங்களுக்குப் பெரிய அளவில் உதவியதாகச் சொல்லப் பெறுவது உண்மை என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி நினைப்பதைவிட வேடிக்கை வேறெதுவும் இருக்க முடியாது. அவர் எப்போதும் தம்மைப்

Scanned with CamScanner

(முன் பக்கத் தொடர்ச்சி)
புகழ்கிறவர்களைத்தாம் ஆதரிப்பார். முன்பு அவர் கொடுத்த பணத்தை நாங்கள் வாங்க மறுத்தபோது எம்மை வெறுத்தார். நாங்கள் எம். சி. ஆரிடம் மட்டும் பணம் வாங்கிக் கொண்டதால் அவரது வெறுப்பு இன்னும் அதிகமானது. வை. கோபால் சாமி எமக்கு ஆதரவாக இருக்கிறார் என்பதற்காக கண்டிக்கப்பட்டு, பின்னர் ஓரங்கட்டப்படுகிறார் என்பது உலகம் அறிந்த ஒன்று.

எங்களுக்கும் பொட்டு அம்மானுக்கும் துமுக்கிச் சண்டை நடந்ததாக இலங்கைச் செய்தித் தாள்களில் செய்தி வந்துள்ளது. ஆனால் பொட்டு அம்மான் என்னும் பெயரில் எங்கள் இயக்கத்தில் யாரும் இல்லை. முன்பு தலைவர் பிரபாகரன் இறந்துவிட்டார் என்றும், எனக்கும் தலைவர் பிரபாகரனுக்கும் துமுக்கிச் (துப்பாக்கிச்) சண்டை என்றும் செய்தித் தாள்களில் கிளப்பி விடப்பட்ட பொய்ச் செய்தியைப் போன்றதுதான் இதுவும்.

ஒருவேளை எதிர்பாராத வகையில் திடீரென்று சிங்களப் படைத்துறை எங்கள் தலைவர் பிரபாகரனைச் சுற்றி வளைத்துப் பிடித்துவிட்டால் என்னாகும் என்று அனைவரும் கேட்கின்றனர். அவ்வாறு நிகழுமானால் அவர் பிடிபட்ட இடத்தைச் சுற்றி இரண்டு கல் சுற்றளவிற்குப் புல் முளைக்க ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் ஆகும். O

## கொடுமை! மிகக் கொடுமை! சாதிகள் ஒழிவது எப்படி? தமிழர்களின் சிறுபிள்ளைத்தனம்!

தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்கு மறவர் (தேவர்) இனத்தினர் (அவர்கள் சொல்லிக் கொள்வது 'சமூகத்தினர்' என்பது)— ஆற்றியுள்ள பங்களிப்பினை ஆராய்ந்து காணும் குறிக்கோளுடன் ஆசியவியல் நிறுவனம் தேசியக் கருத்தரங்கு ஒன்றினைவரும் சூன் 3,4 பக்கல்களில் சென்னையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாம்!

இக் கருத்தரங்கில் மறவர் இனத்தினர் பல்வேறு பண்பாட்டுக் கூறுகள் பற்றி இருபதுக்கும் மேற்பட்ட அறிஞர்கள் ஆய்வுரைகள் நிகழ்த்துவார்களாம்.

என்ன கொடுமை! தமிழ் மொழியை, தமிழ் இலக்கியத்தை, தமிழ்ப் பண்பாட்டை வளர்ப்பவர்கள் தமிழர்கள் இல்லையாம்! தேவர், கள்ளர், அகம்படியர், கவுண்டர், வன்னியர், முதலியார், நாடார், பிள்ளையார், பள்ளர், பறையர் என்று பற்பல சாதியினரும் வளர்த்துள்ள பங்கைக் கூறு போட்டுப் பார்க்கும் இது போன்ற சாதீய விளையாட்டு எதற்கு? இத்தகைய போக்குகள் தமிழர்களை ஒன்றுபடுத்துமா, வேறு பிரிக்குமா? எண்ணிப் பார்க்க வேண்டாவா? இது போலும் முயற்சிகளால் பார்ப்பனீயத்திற்குத்தானே ஆக்கம்! தமிழின மக்களே எண்ணிப் பாருங்கள்! O

3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

### பாவலரேறு உ.த.மு.க. படைப்பு!

**வெளியீட்டுப் பொருள் வைப்பு—வேண்டுகோள்!**

- O பாவலரேறு உ.த.மு.க சிந்தனை
- O உ.த.மு.க. கொள்கை இலக்கியம்.
- O பாவலரேறு கருத்துரைகள்—

ஆகியவற்றை வெளியிடப் 'பொருள் வைப்பு' பயன்படுத்தப்படும். எனவே, உ.த.மு.க. அன்பரும் ஆர்வலரும், தமிழினச் செல்வரும் தாராளமாகப் பொருளுதவி, விடுப்பதற்குரிய முகவரி:

நா. வினைதீர் குன்றன்
உ.த.மு.க தலைமையகப் பொருளாளர்,
'திருவள்ளுவர் இல்லம்'
இ—எண்: 6. கண்ணதாசன் தெரு,
சிறிராம நகர், கோட்டையூர்.
பசும்பொன் மாவட்டம் 623 106.

பணவிடை, விடுப்போர்—'பாவலரேறு படைப்புக்காக' என்று கிழிப்பத்தில் குறிப்பிட வேண்டுகிறேன். காசோலை விடுப்போர், தனி மடலில் விளக்கம் எழுதி இணைக்கவும்.

பறம்பை அறிவன், பொதுச் செயலாளர்

**அறிவியல் அறிஞர், தமிழினம் வாழ உழைத்த செம்மல்—பேரா. இல.க. இரத்தினவேல் அவர்களின் நினைவு நாள் (8-4-92) வேண்டுகோள்:**

உ.த.மு.க. (அறிவியல்) செயலகம்: பேரா. இல.க. இரத்தினவேல் வரலாற்றையும், அவர்தம் படைப்புகளையும் திரட்டியளிக்க முன்வருதல் வேண்டும். இதற்கு அவரோடு தொடர்புடையவர்கள் துணைபுரிதல் வேண்டும். அவர் புகழ் நிலவுக.

பறம்பை அறிவன் பொதுச் செயலாளர். O

### தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு விலையேற்ற அறிவிப்பு!

அச்சீட்டுத் தாள்களும் மை முதலிய அச்சுப் பொருள்களும் கடுமையாக விலையேறியுள்ளதைக் கருத்தில் கொண்டு, **தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு** ஆகிய நம் இதழ்களின் விலைகளையும் உயர்த்த வேண்டுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. விலைகள், உறுப்பினர் கட்டணங்கள் கீழ்வருமாறு உயர்த்தப் பெறுகின்றன.

| | தனியிதழ் | ஆண்டுக் கட்டணம். | அரை ஆண்டு | வாணாள் கட்டணம். |
|---|---|---|---|---|
| தென்மொழி | 3-00 | 36-00 | 18-00 | 500-00 |
| தமிழ்ச்சிட்டு | 1-50 | 18-00 | 10-00 | 250-00 |
| தமிழ்நிலம் | 1-50 | 36-00 | 18-00 | 500-00 |

2-ஆம் பக்கத் தொடர்ச்சி)
உறுதிப்பாடுகள் முதலிய அனைத்தையும் தூக்கி-யெறிந்துவிட்டு, அடுத்த நொடியே, அமெரிக்கா-வுக்கு வானூர்தி ஏறி விடுவார். அதன் பின் அவரது வாழ்க்கை மிக அமைதியாகவே இருக்கும் என்ப-திலும், அமெரிக்க நடிகை எலிசபெத் டெய்லரைப் போல் ஒரு கவர்ச்சி மிகுந்த வாழ்க்கையாகவே கூட இருக்கலாம் என்பதிலும் யாருக்கும் ஐயமே வேண்-டாம். இஃது எப்படியோ போகட்டும்.

இனி, விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்துள்ள இந்த நிலையில் நாம் என்ன செய்வது என்னும் சிந்தனை நிலை இங்குள்ள பல அரசியல்; இனவியல், கட்சிகளுக்கும் அவற்றின் தலைவர்களுக்-கும் உண்டு.

ஆனால், நம்மைப் பொறுத்த வரையில், நம் கருத்தும், கொள்கையும் முயற்சிகளும் இனிமேலும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குச் சார்பாகவும் ஆதரவாகவுமேதான் இருக்கும் என்பதில் கொஞ் சமும் ஐயமில்லை. ஏழாண்டுகள் இல்லை; எழுபது ஆண்டுகள் இல்லை; எழுநூறு ஆண்டுகள் சிறை யென்றாலும் நிலை ஒன்றுதான். உலகில் ஒரு மண்டேலா தான் இருக்க முடியும் என்றால், நம் வீரத் தமிழின வரலாற்றுக்குப் பெருமையில்லையன்றோ? அவ்வாறு ஒரு நிலை வருமானால், நம் அனைத்து முயற்சிகளும் செயற்பாடுகளும் இப்பொழுது உள்ள வற்றை விட முடுக்கமாகத்தான் இருக்கும். செயலலிதாவும், சவாணும், நரசிம்மராவும் ஏதோ இன்று மட்டும் தமிழினத்திற்குப் புதிதாக முளைத்த எதிரிகளல்லர். தொடர்ந்து, மரபு மரபாகக் கடந்த ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுகளாக இருந்து வரும் எதிரியினத்தின் - பகையினத்தின் - வெளிப்பாடுகள் தாம்! அதே போல இவ்வினத்திற்குள்ள துணிவும், தன்மானமும் வீரமும் நம இனத் தலைவன் பிரபாகர-னோடும் அவனோடு தோளோடு தோள்களாய், குருதி-யொடு குருதித்துளிகளாய் இயங்கும் புலிக்குருளைக ளோடும் புலிப் போத்துக்களோடும் முடிந்து விடுவன அல்ல. அவ் வீரமும், துணிவும் தன்மானமும் இவ்வுல கில் தமிழினம் கால் கொண்ட அனைத்து இடங்களி-லும் வித்திடப் பெற்று விளைந்து வருவனதாம்

எதிரிகளின் செயற்பாடுகளும் முடுக்கங்களும் தொடர்கதையானால், நம்முடைய செயற்பாடுகளும் முடுக்கங்களும் சாம்பி விடுவதோ சடக்கென முறிந்து முடிந்து விடுவதோ அல்ல!

எப்படியோ, தென்னாப்பிரிக்காவின் விடுதலை வீரன் மண்டேலாவை விட, பாலத்தீன விடுதலை இயக்கத் தலைவன் யாசிர் அராபத்தைவிட, தமிழின மாவீரன் பிரபாகரன், பார்ப்பனிய 'இந்தி' அரசுக்கு, அஞ்சத்தக்க மாபெரும் வீரனைக் காட்சியளிக்-கிறான் என்பதும், உலகத் தலைவர்கள் அனைவரி-லும் உயர்ந்து நிற்கிறான் என்பதும் அழிக்க முடி யாத உண்மைகளாக, இந்திய அரசின் ஏற்பிசைவு பெற்று நிற்கின்றன! இந்த வானுயர்ந்த நிலைக்குப் பிரபாகரனை உயர்த்திய இந்திய அரசுக்கும் செய-லலிதாவிற்கும் பிற அமெரிக்கக் கூலிகளுக்கும் நாம் நன்றி சொல்ல வேண்டிய காலம் விரைந்து வந்து கொண்டிருக்கிறது! வாழ்க தமிழீழம்! வளர்க விடுதலைப்புலிகள் இயக்கம்! • O

## பாதுகாப்புக்கே ஏராளமாக செலவாகிறது!

இந்திராவின் பாதுகாப்புக்கு 600 காவலர்கள். (போலீசுக்காரர்கள்) அதுவே அதிகம் என்று முணுகியவர்கள் உண்டு. இன்று தலைமையமைச்ச-ரின் (பிரதமரின்) பாதுகாப்புக்கு 3000 காவலர்கள்! இ'து அல்லாமல் மாநிலக் காவலர்கள் செலவு வேறு. பயணம் போகும் போது ஒவ்வோர் இடத்திலும் செலவு! தலைமையமைச்சரின் பயணத்தில் இப்போது 36 குண்டு தொளைக்காத இயங்கிகள் உடன் வரு-கின்றன.

தலைமையமைச்சருக்குத் தரும் அதே மாதிரிப் பாதுகாப்பு இப்போது வி.பி.சிங்குக்கு - சந்திர சேகருக்கு - சோனியாவுக்கு - அவர் குடும்பத்துக்கு! இ'து அல்லாமல் 250 மிக முகாமையான பெருமகர்-களுக்குத் தில்லி காவல்துறை பாதுகாப்புத் தர வேண்டி உள்ளது. 1980-இலிருந்து 1990 வரை பெருமகர்களின் பாதுகாப்புக்குச் செலவிடப்பட்ட தொகை பத்து ஆண்டுகளில் ரூ. 10.33 கோடிதான்! ஆனால் 1991-இல் மட்டும் ரூ 7.31 கோடி. இது அல்லாமல் அந்த 250 பெருமகர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 100 கோடி செலவாகின்றது.

தில்லி நகர் ஆட்சியிடம் இருக்கும் காவலர் களின் எண்ணிக்கை 50000 பேர் தாம். பெருமகர்-களின் பாதுகாப்புக்கு மட்டும் 10,000 காவலர்கள் போய் விடுகின்றனர். மீதி இருப்பவர்கள் தாம் திருட்டு, கொலை, வன்முறைத் தடுப்புகளுக்கு தில்லி யின் 50 இலக்கம் மக்கள் தொகைக்கு 40,000 காவலர்கள் தாம் ஓர் இலக்கம் மக்களுக்கு 800 காவலர்கள் கூட ஆகாது. இவர்கள் என்ன சட்டம் ஒழுங்கைப் பராமரித்து விட முடியும்?

மகாராட்டிராவில் அமிதாப்பச்சனுக்கும் பால் தாக்கரேவுக்கும் - மிக அதிக ஏழு எண்ணிக்கைப் பாதுகாவலர்கள். பாதுகாப்பு வேலைக்கு இயங்கி வாடகை மட்டும் சென்ற ஆண்டில் தில்லியில் 22 இலக்கம் வரை தரப்பட்டிருக்கிறது. பஞ்சாபில் வன்முறையைத் தடைசெய்ய மட்டும் இப்போது உருப 300 கோடி செலவிடப்படுகின்றது (1981இல் வெறும் 18 கோடிதான்). காவல் துறைக்கு ஒதுக்-கப்படும் மொத்த செலவில் 25% பெருமகர்கள் பாதுகாப்பு வேலைக்குத்தான் போகிறது. நாடுமுழு-தும் இருக்கும் அரசியல் பெருமகர்களைப் பாதுகாக்க 43% காவலர்கள் கடமையாற்றுகிறார்கள். மீதி 57% தான் இந்தியாவின் 84 கோடி மக்களுக்கு என பணி செய்கிறவர்கள். —சங்கமித்ரா.

நன்றி :- சிந்தனையாளன் நவ. 91.

Scanned with CamScanner

1.

TN/MS(C) 657

# பிராமணர்க்கு உயர்ச்சி கூறும் மனுதர்மத்தைக் கொளுத்துங்கள்!

**இவை ஏமாற்றுகள் அல்லவா?**
**இக்கருத்துகள் நூல்வடிவில் இருக்கலாமா?**
**மனுதர்மத்தைத் தடைசெய்ய வேண்டாமா?**

O தர்மத்தை நிறைவேற்றுவதற்காகவே பிராமணன் பிறந்துள்ளான்.

O உலகிலுள்ள செல்வமனைத்தும் பிராமணனுக்கே சொந்தம். அவன் உயர்பிறவியில் பிறந்துள்ளதால் அவன் அவற்றிற் கெல்லாம் உடையவனாகின்றான்!

O பிராமணன் உண்ணுவதெல்லாம் அவனுடைய உணவே! அவன் உடுப்பதெல்லாம் அவனுடைய ஆடைகளே! எல்லா மக்களும் உயிர் வாழ்வதே பிராமணனுடைய அருளினால்தான்!

O முட்டாளாக இருப்பினும் சரி, படித்தவனாக இருப்பினும் சரி, பிராமணன் தெய்வத் தன்மையுடையவனே. மூன்று உலகங்களும் தெய்வங்களும் நின்று நிலவுவதற்குக் காரணமே பிராமணன்தான். அவன் இழிவான வேலையில் அமர்ந்திருப்பினும் பிராமணனை எல்லா வழிகளிலும் பெருமைப் படுத்த வேண்டும். ஒவ்வொரு பிராமணனும் வணங்குவதற்குரிய ஒரு தெய்வமே!

O மூன்று தெய்வீக மெய்யறிவியல்களிலும், கொள்கைகளிலும் பிராமணர்கள் வல்லவர்களாதலால் அரசன் காலையில் எழுந்தவுடன் அவர்களை வணங்கி அவர்களின் அறிவுரைகளை ஏற்க வேண்டும்.

O தெய்வீகச் சட்டங்களுக்குக் காரணம் பிராமணன்தான். அவன் பிறவியால் தெய்வங்களாலும் வணங்கத் தக்கவன். அவனது சொல் மக்களுக்குத் தெய்வக் கட்டளை போன்றது.

O புதையலைக் கண்டால் படித்த பிராமணன் முழுவதையும் எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் அவன்தான் அனைத்திற்கும் உடையவனாயிற்றே. அரசன் புதையல் எடுத்தால் ஒரு பாதியை அரசுக்கும் மறு பாதியைப் பிராமணர்க்கும் கொடுக்கக் வேண்டும்.

O பிராமணர்களுக்கு அரசன் வரி போடக் கூடாது. அதுவுமன்றி அவர்களை அரசே பாதுகாத்தல் வேண்டும்.

O பிராமணன் நான்கு பெண்களை மணந்து கொள்ளலாம். சத்திரியன் மூன்று பெண்களையும், வைசியன் இரண்டு பெண்களையும், சூத்திரன் ஒரு பெண்ணையுமே மணந்து கொள்ளலாம்.

O பிராமணன் கூலி கொடுத்தோ, கொடாமலோ சூத்திரனிடம் வேலை வாங்கிக் கொள்ளலாம். ஏனெனில் பிராமணனுக்குத் தொண்டு செய்யவே சூத்திரன் பிரம்மாவால் படைக்கப் பட்டிருக்கிறான்.

O சூத்திரன் தேடி வைத்துள்ள செல்வத்தையும் பிராமணன் தடையின்றிக் கைப்பற்றிக் கொள்ளலாம். ஏனெனில் அடிமையாகிய சூத்திரன் எவ்வகைச் செல்வத்திற்கும் உரியவனாக மாட்டான்.

O பிராமணனைக் காப்பாற்றும் பொருட்டுப் பொய் சொன்னாலும் குற்றமில்லை; பிராமணரல்லாதவரைக் கொன்றாலும் குற்றமில்லை.

O பிராமணனைச் சூத்திரன் திட்டினால் அவனது நாக்கினை அறுக்க வேண்டும்.

O பிராமணனுடைய சாதிப் பெயர்களைச் சொல்லித் திட்டும் சூத்திரனது வாயில் காய்ச்சிய இரும்புக் கம்பியை எரிய எரியச் செருக வேண்டும்.

O பிராமணன் எவ்வளவு பெரிய குற்றங்களைச் செய்தாலும் அவனைத் தூக்கிலிடக் கூடாது. அவனது தலையை மொட்டையடித்தல் வேண்டும். அதுவே தூக்குத் தண்டனைக்கு ஒப்பாம். மற்ற சாதியினருக்குக் கொலையே தண்டனை.

O பிராமணனுக்கு வேதம் ஓதுதலே தவம். சத்திரியனுக்கு மனுநூலில் சொல்லியபடி செய்தலே தவம். வைசியனுக்கு வாணிகம் செய்தலே தவம். சூத்திரன் பிராமணனுக்குப் பணிவிடை செய்தலே தவம்.

O உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத தண்ணீர், தவச வகைகள், உயிர்வளி ஆகியவை எங்கட்கு (பிராமணர்களுக்கு) நன்மை பயப்பனவாகவும், எங்களால் வெறுக்கப் படுகின்றவர்களுக்குத் தீமை செய்வனவாகவும், ஆக வேண்டும். வேத, மிருதிகட்கு இணங்கி நடக்காதவர்கட்கு இவ்வுலகம் நஞ்சாகப் போகட்டும். —*யஜுர் வேதப் பாடல்.*

O "அனைத்து உயிர்கட்கும் நானே கடவுள்; எனக்குப் பிராமணரே கடவுள்" (ப்ராமணோ மம தேவதா:) —*பகவத் கீதையில் கண்ணன்.* O

ஆசிரியரும் வெளியிடுபவரும்.
**பாவலரேறு பெருஞ்சித்திரனார்,**
தென்மொழி 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

நூல்-அஞ்சல்

பெறுநர்